DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**CC.No.14/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW1 | Caste | : | |
| Name | : | ரீகன் | Age | : | |
| F/N. | : | அலெக்சாண்டர் | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 8th day of July 2022.

08.07.2022.

முதல் விசாரணை:-

நான் பாம்பன் சின்னப்பாலத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.04.2018-ம் தேதி பாம்பன் பஞ்சாயத்து ஆபிஸ் முன்பாக எனது தகப்பனார் இருசக்கர வாகனத்தில் வந்தபோது பின்னால் வந்த மாருதி வாகனத்தை ஓட்டி வந்த ஆஜர் எதிரி எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். அதன்பிறகு நான் பாம்பன் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சென்று பார்த்தேன். என் தகப்பனாரை பார்த்தபோது அவருக்கு தலை மற்றும் கால், கைகளில் அடிபட்டு இரத்தக்காயமாக இருந்தது. மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் ஆசி மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தோம். எனது தகப்பனார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்து சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக்கோரி நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை நான் தான் எழுதிக்கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை. புகார் எழுதித்தான் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரை எனது மனைவி எழுதினார். எதிரியை காவல்நிலையத்தில் வைத்து தான் பார்த்தேன். எனது தகப்பனாருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றால் சரிதான். வாகனத்தில் என் தகப்பனார் செல்லும்போது தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். 17.04.2018-ம் தேதி 11.30 மணியளவில் இராமநாதபுரம் மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். புகாரை எழுதுவதற்கு விபரம் யார் சொன்னார்கள் என்றால் ஸ்டேசனில் இருந்து சொன்னார்கள். யாரிடம் விசாரித்து தெரிந்து கொண்டீர்கள் என்றால் எனது தரப்பு வழக்கறிஞரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேன். பாம்பன் பஞ்சாயத்து அலுவலகம் தேசிய நெடுஞ்சாலைக்கு தெற்கு பக்கமாக உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் மேற்கிலிருந்து கிழக்காக வரவேண்டும் என்றால் ரோட்டில் இடது புறமாக தான் வந்தார் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனார்

பஞ்சாயத்து ரோடு ஆபிசுக்கு வடபுறத்திலிருந்து தென்புறமாக செல்லும்போது பின்புறம் வரும் வாகனத்தை கவனிக்காமல் கடந்துவிட்டார் என்றால் தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் எனது தகப்பனாரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் என்றால் சரியல்ல. விபத்து காப்பீடு பெறுவதற்காகத்தான் இந்த வழக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்தபின்பு என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் 1 வாரம் கழித்து விசாரித்தார்கள். விபத்தில் காயம்பட்டு இறந்த எனது தகப்பனாரை ஆஜர் எதிரி தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்ற விபரத்தை தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். இந்த விபத்திற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.14/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW2 | Caste | : | |
| Name | : | ஜார்ஜ் | Age | : | |
| F/N. | : | ஜூலியஸ் | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 8th day of July 2022.

08.07.2022.

முதல் விசாரணை:-

நான் பாம்பன் தோப்புக்காட்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 07.04.2018-ம் தேதி நானும், எனது மனைவியும் அக்காள்மடம் போவதற்காக பாம்பன் ஊராட்சி மன்றம் அருகில் சென்றபோது அலெக்சாண்டர் என்பவர் டிவிஎஸ் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். நாங்கள் ரோட்டிற்கு வடக்கு பக்கம் சென்று கொண்டிருந்தோம். அலெக்சாண்டர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த நான்கு சக்கர வாகனம் அந்த டிவிஎஸ் மோட்டாரின் மீது மோதியதில் அலெக்சாண்டர் கீழே விழுந்துவிட்டார். அதில் அவருக்கு தலையின் பின்பக்கம், கால் பகுதியில் அடி ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை நிறுத்தி அநத வாகனத்திலேயே அடிபட்ட நபரை ஏற்றி பாம்பன் மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

எனது மனைவி பெயர் ஜெயா. போலீசார் வழக்கு சம்பந்தமாக சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். அப்போது மணி என்னவென்றால் காலை 11.30 மணி இருக்கும். போலீஸ் விசாரணையில் நானும், எனது மகளும் சென்றதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை . மனைவி என்று சொன்னததை மகள் என்று எழுதியிருப்பார்கள். காயம்பட்ட நபரை நாங்கள்தான் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன அலெக்சாண்டர் எனக்கு ஒரே ஊர்க்காரர். உறவுக்காரர் இல்லை. நான் என்ன வேலையாக அக்காள்மடம் சென்றேன் என்றால் அக்கா வீட்டிற்கு சென்றேன். நான் அக்கா வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது விபத்து நடைபெற்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லைஎன்றால் சரியல்ல. நான் சரியாக எந்த இடத்தில் போய்கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது என்றால் பாம்பன் ஊராட்சி அலுவலகம் எதிரே 5 அடி முன்புறமாக போய்க்கொண்டிருந்தபோது நடந்தது. விபத்தில் இறந்து போன அலெக்சாண்டர் தேசிய நெடுஞ்சாலையில் வடக்குபுறமாக இருந்த தெற்குபுறமுள்ள பஞ்சாயத்து அலுவலகத்திற்கு செல்லும்போது பின்புறமாக வந்த வாகனத்தை கவனிக்காமல் விபத்து

ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. நான் பார்க்கும்போது அலெக்சாண்டர் ஓட்டி வந்த வாகனத்தில் பின்புறம் எந்த சேதமும் இல்லை என்றால் நான் பார்க்கவில்லை. அதேபோல் காருக்கும் முன்புறம் எந்த சேதாரமும் இல்லை என்றால் நான் பார்க்கவில்லை. சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எனது உறவினர் மற்றும் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் யாரும் இல்லாததால் தான் ஆஜர் எதிரி காயம்பட்ட நபரை மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து ஏற்பட்டிருந்தால் மேற்படி கார் என்மீது மோதி இருக்கும் என்றால் சரியல்ல. விபத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும், விபத்து அலெக்சாண்டரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.14/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW3 | Caste | : | |
| Name | : | ஜெயா | Age | : | |
| H/N. | : | ஜார்ஜ் | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 8th day of July 2022.

08.07.2022.

முதல் விசாரணை:-

நான் பாம்பன் தோப்புக்காட்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 07.04.2018-ம் தேதி நானும், எனது கணவரும் அக்காள்மடத்தில் உள்ள எனது நாத்தனார் வீட்டில் செல்வதற்காக பாம்பன் ரோட்டில் நடந்து வந்தோம். வழக்கில் இறந்த நபரான அலெக்சாண்டர் வந்தார். அதற்கு பின்னால் ஆஜர் எதிரி நான்கு சக்கர வாகனத்தை ஓட்டி வந்து அலெக்சாண்டர் இருசக்கர வாகனத்தில் மோதியதில் அவர் தூக்கி எறியப்பட்டார். தூக்கி எறியப்பட்ட சத்தம் கேட்டு நாங்கள் பார்த்து போய் அவரை தூக்க சென்றபோது ஆஜர் எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி பஸ் ஸ்டான்டு வரை சென்றுவிட்டார். அங்கிருந்த நபர்கள் அவரை பிடித்து திருப்பி கொண்டு வந்து அவர் வாகனத்திலேயே அடிபட்ட நபரை ஏற்றி பாம்பன் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

பாம்பன் தோப்புக்காடு பகுதி அக்காள்மடம் இரயில்வே கேட் தாண்டி வலது புறமாக சென்றால் உள்ளது என்றால் சரிதான். தோப்புக்காட்டிற்கும், அக்காள்மடத்திற்கும் சுமார் 4 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து, எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து மாலை 07 – 07.30 மணிக்கு விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் நானும், எனது அப்பாவும் போய்க்கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் கணவருடன் தான் சென்றேன். என்னை போலீசார் விசாரிக்கும்போது என் கணவர் என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தமாக என் கணவரை விசாரிக்கும்போது நான் உடனிருந்தேனா என்றால் 20 அடி தள்ளியிருந்தேன். என் கணவரை விசாரிக்கும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 07 - 07.30 மணி இருக்கும். நான் டமார் என்று சத்தம் கேட்டு தான் திரும்பி பார்த்தேனா என்றால் அவரது சட்டையை வண்டியின் கம்பி இழுத்து சென்றபோது பார்த்தேன். எனக்கு அலெக்சாண்டர் உறவுக்காரர் என்றால் அவர் யார் என்று தெரியாது. அலெக்சாண்டர் வலதுபுறமுள்ள பஞ்சாயத்து அலுவலகம் செல்வதற்காக பின்புறம் வந்த

வண்டியை கவனிக்காமல் இடதுபுறம் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சரியாக விபத்து ஏற்பட்ட இடத்திற்கு நேர் எதிராக பஞ்சாயத்து அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். தோப்புக்காட்டில் இருந்து எனது நாத்தானர் வீட்டுக்கு அக்காள்மடம் செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலை வரவேண்டிய அவசியமில்லை என்றால் தோப்புக்காடு இரயில்வே கேட் வழியாக செல்லலாம் என்றால் சரியல்ல. சாமான் வாங்கிவிட்டு தேசிய நெடுஞ்சாலை வழியாக சென்றோம். பாம்பனில் இருந்து அக்காள்மடம் 3 கி.மீ என்றால் சரிதான். பாம்பனில் இருந்து அக்காள்மடம் செல்வதற்கு அரசு பேருந்து, ஆட்டோ உள்ளது என்றால் சரிதான். பாம்பன் பஞ்சாயத்து அலுவலகம் அக்காள்மடத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். பாம்பன் பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து அக்காள்மடம் பேருந்துநிறுத்தம் 50 அடி தொலைவு இருக்கும் என்றால் சரிதான். விபத்தை நானும், என் கணவரும் பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோனவர் என் உறவுக்காரர் என்பதாலும் பார்க்கதா சம்பவத்தை பார்த்தாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.